DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 145/2014 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | கிருஷ்ணன் |
| Father / Husband Name | சுப்பையா |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 07th May 2024.

---

**(1 வது எதிரி ஆஜர்).**

**(2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எந்த தேதியில் பத்திரம் காணவில்லை என்று நான் புகார் கொடுத்திருந்தேன் என்றால் ஞாபகமில்லை. புகாரை யார் எழுதியது என்றால் வக்கீல் எழுதிக் கொடுத்தார். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் எனது பத்திரத்தை எனக்கு தெரியாமல் எடுத்து போஸ் என்பவர் வேறு ஒரு நபரை எனது பெயரைச் சொல்லி அவர் மூலமாக அடமானம் வைத்து பணம் பெற்றுள்ளார். அந்த விவரம் அசல் மற்றும் வட்டிப் பணத்தைக் கேட்டு அடகுக்கடைக்காரர் என்னிடம் கேட்ட போது தான் தெரிந்தது.

2) எனது பெயரைச் சொல்லி யாரை அழைத்துச் சென்றார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த நபரின் பெயர் என்ன என்றால் தர்மன். எந்த தேதியில் அந்த நபர் கடன் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்சமயம் அந்த சொத்தை நான் விற்றுவிட்டேன் என்றால் ஆமாம். யாரிடம் அந்த சொத்தை விற்றேன் என்றால் கண்டனியைச் சேர்ந்த ஒரு நபரிடம் விற்றுவிட்டேன். என்னிடம் கிரயம் பெற்ற நபருக்கு நான் அசல் பத்திரத்தை கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல வழக்கு முடிந்து பத்திரத்தை தருவதாகச் சொல்லித்தான் இடத்தை விற்றேன். நான் சொல்வது பொய் என்றாலும் அசல் பத்திரம் என்னிடம் தான் இருந்தது என்றால் அதைக் கொடுத்து தான் சொத்தை விற்றேன் என்றாலும் சரியல்ல.

3) நான் யாரிடம் சொத்தை விற்றேனோ அவரிடம் தான் அசல் பத்திரம் உள்ளது என்றால் சரியல்ல போஸ் என்பவரிடம் தான் அசல் பத்திரம் உள்ளது. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை பழைய நீதிமன்றத்தில் தான் சாட்சியம் அளித்துள்ளேன். எதிரியை நான் அணுகி சிப்காட் காவல் நிலையத்தில் எனக்குள்ள பிரச்சனை தீர்த்துக் கொடுக்க நான் கேட்டதாகவும் அதற்கு எதிரி எனது சொத்துப் பத்திரத்தைக் கேட்டதாகவும் என்று கூறிய விவரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

4) எதிரி எனது வீட்டுப் பத்திரத்தை சட்டைப் பைக்குள் வைத்து எடுத்து சென்றுவிட்டார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தேதி, நேரம் ஞாபகமில்லை. புகாரில் தேதி, நேரம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி என் வீட்டுப் பத்திரத்தை என்னிடமிருந்து எடுக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டுப் பத்திரத்தை வைத்து யாரும் கடன் வாங்கவில்லை என்றாலும் சௌந்தரராஜன் என்பவரிடன் எதிரி கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) எதிரி மீது ஏற்கனவே ஒரு புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. காவல் நிலையத்தில் இந்தப் புகாரை நான் நேரடியாகத் தான் சென்று கொடுத்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில்

பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் பத்திரம் என்னிடம் தான் இருந்தது என்றாலும் சரியல்ல.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எனது வீட்டுப் பத்திரத்தை காணவில்லை என்று சொல்லி எனது தம்பி மகள் மீது ஒரு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டு பணத்தை தர மாட்டார்கள் என்றாலும் பதிவுசெய்யப்பட்ட அடமானப் பத்திரத்தின் பேரில் தான் பணம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். புகாரில் எனது வீட்டுப் பத்திரத்தின் ஆவண எண் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

2) எனது பத்திரத்தை வட்டிக் கடைக்காரர் சௌந்திரராஜன் என்பவர் வைத்திருந்தது தொடர்பாக அவர் மீது நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கு வேண்டப்படாதவர்களின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 07.05.2024**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.